வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 139/2023

வழக்கு சாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | சண்முகம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 49 |

தேதி 19.08.2026.

எதிரி 1 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் தற்போது விநாயகபுரம் பகுதியில் வசித்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. கடந்த 2019ம் ஆண்டு காலை 10 மணி அளவில் எனது மனைவி ஆட்டிசம் நோயுள்ள எனது மகனை அழைத்து கொண்டு வெளியே வந்தார். அப்போது மாடியில் இருந்த எனது அண்ணி சின்ன சண்டையானது பெரிய சண்டையாகி எனது காலில் போட்டதில் எனக்கு ஏழு தையால் போட்டார்கள். என்னை ஆபாசமாக பேசினார்கள். எனது அண்ணனும் பேசினார். எனது மகன் கழுத்தை பிடித்து நெறித்தார்கள். ரெட்டிடேரியில் உள்ள மாயா மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வைத்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்த்து தான். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1வது எதிரி எனது சொந்த சகோதரர் என்றால் ஆமாம். சம்பவத்திற்கு முன்பு எனது குடும்பத்திற்கும், எதிரிக்கும் சண்டை

உள்ளது என்றால் ஆமாம். நான்கு, ஐந்து முறை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம். சம்பவத்திற்கு முன்பு எனது குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் சுமூகமான உறவு இல்லை என்றால் ஆமாம். எனது மனைவி தகராறு ஆன பின்பு தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். குளித்துக் கொண்டு இருந்தேன். 2வது எதிரிக்கும் எனது மனைவிக்கும் ஆரம்பத்தில் என்ன சண்டை நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் இல்லை. காலையில் இருந்தே சண்டை நடந்துக் கொண்டு தான் இருந்தது. எனது மனைவி மீது கல் எறிந்தார்கள் என்றால் ஆமாம். கல்லை எடுத்து அடித்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 2வது எதிரி கல்லை கையில் வைத்திருந்ததை நான் பார்க்கவில்லை என்றால் பார்தேன். 1வது எதிரி கல்லால் என்னை அடித்தார் என்றால் இல்லை. ஆபாசமாக பேசினார். 1வது எதிரி என்னை கல்லால் அடிக்கும் போது எங்கு இருந்தார் என்றால் கீழே தான் இருந்தார். கல் எறிந்த தூரம் எவ்வளவு என்றால் 7, 8 அடி இருக்கும். கல் எடை எவ்வளவு என்றால் அரைகிலோ இருக்கும். 4 கற்கள் விழுந்தது. அடித்த கல்லை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இரத்தக்கறை பார்த்தேனா என்றால் நான் மருத்துவமனை சென்றிருந்தேன். சம்பவ இடம் குடியிருப்பு பகுதி என்றால் ஆமாம். அக்கம் பக்கம் அதிக வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். நேரில் பார்த்த சாட்சி உள்ளார்களா என்றால் உள்ளது. காயத்தில் எனக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை என்றால் ஆமாம். சம்பவத்திற்கு பிறகு சுயநினைவுடன் இருந்தேனா என்றால் இல்லை. எனது மனைவி கல் விழுந்ததும் கீழே விழுந்துவிட்டார்களா என்றால் ஆமாம். எனது மனைவியை நான் மருத்துவமனை அழைத்துச் சென்றேனா என்றால் இரண்டு பேரும் தான் சென்றோம். ஆபாசமாக பேசியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாக கூறுவது என்பது ஏற்கனவே இருந்த பகையால் என்றால் இல்லை. சம்பவம் 08.20 நடந்ததற்கு 12 மணிக்கு புகார் அளித்தேன் என்றால் ஆமாம். எனது மனைவியுடம் கலந்து பேசி கொடுத்ததால் தான் காலதாமதம் என்றால்

ஆமாம். எனது மகனை கழுத்தை பிடித்தார் என்று புகாரிலிலும், போலீஸ் விசாரணையிலும் கூறாமலும் தற்போது தான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1, 2வது எதிரிகள் கல் எறியவில்லை என்றால் சரியல்ல. ஆபாச வார்த்தை , கொலைமிரட்டல் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.